*31*

# சிலுவையினால் பரிசுத்தமாக்கப்படுதல்

## 1 கொரிந்தியர் 1:26–31

*"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன்; முடிவோ நித்தியஜீவன்" (ரோமர் 6:22).*

பாவிகளை இரட்சிக்கவும் சீஷர்களாக்கவுமே கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் (மத்தேயு 28:18-20). இருப்பினும், ஒரு காலத்தில் "உள்ளாக" இருந்த சுவிசேஷ ஊழியம் இப்போது "வெளியே" இருக்கிறது. "ஒருவர், தம்மை இழந்துபோகப்பட்டவராகக் கண்ணோக்காது இருக்கும்போது, அவரை மீட்க முயற்சி செய்யவேண்டியது ஏன்?" என்று சிலர் இப்போது கேட்கின்றனர்.

### அர்ப்பணிப்பு

பரிசுத்தமாகுதல் ஒருக்காலும் "உள்ளாக" இருந்ததில்லை. நம்மில் பலருக்கு அது என்ன என்றுகூடத் தெரியாது. "பரிசுத்தமாகுதல்" என்பது, தேவனுடைய பயன்பாட்டிற்கென்று "தனியே ஒதுக்கி வைக்கப்படுதல், அர்ப்பணிக்கப்படுதல்" என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. மதத்தில் இது "பரிசுத்தம்" என்று அர்த்தப்படுகிறது. பேதுரு கூறியபடி, "... நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1 பேதுரு 1:15, 16). நீதிமான்களாக இராமலேயே நாம் சரியானவர்களாக இருக்க முடியும் (மத்தேயு 6:1-18), ஆனால் நாம் சரியானவர்களாயிராமல் நீதிமான்களாயிருக்க முடியாது. பாவிகள் இரட்சிக்கப்பட வேண்டும், மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டுள்ளனர் (அது இரட்சிப்பாக உள்ளது). கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டுக் கொண்டுள்ளனர் (அது பரிசுத்தமாக்கப்படுதலாக உள்ளது). கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் (அது மகிமைப்படுத்தப்படுதலாக இருக்கிறது). இரட்சிக்கப் பட்டவர்கள் மறுபடியும் இரட்சிக்கப்பட அவசியமில்லை, அல்ல, ஆனால் அவர்கள் பரிசுத்தமாக்கப்படுதல் அவசியமாக உள்ளது. இரட் சிக்கப்படாதவர்களைத் தேவன் பரிசுத்தமாக்குவதில்லை.

நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள தகுதியிடத்தின் காரணமாக இரட்சிப்பைப் பெற்றுள்ளோம். இருப்பினும், பரிசுத்தமாகுதல் என்பது ஒரு [தொடர்ந்த] செயல்முறையாக உள்ளது. நாம் தேவனுக்குக் கீழ்ப் படிதல் என்ற நிகழ்ச்சியின் மூலமாக இரட்சிப்பு வருகிறது; பரிசுத்தமாக்கப் படுதல் என்பதற்கு வாழ்நாள் முழுவதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பவுல், "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 3:18).

இரட்சிப்பு, பரிசுத்தமாகுதல், மற்றும் மகிமையடைதல் ஆகியவற்றை நாம் குழப்பிக்கொள்ளாது இருப்போமாக. நாம் கருத்துக்களில் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பாலான மதக்குழப்பங்கள் இந்த மூன்று சத்தியங்களையும் ஒன்று கலப்பதினால் வருகின்றன. இரட்சிப்பு என்பது தொடக்க நிலையில் இறுக்கமானதாகவும், நாட்பட நாட்பட மனிதத்தன்மை யினால் தொடரப்படுகிறதுமானதல்ல.

## பரிபூரணப்படுதல் அல்ல, [ஆனால்] விசுவாசம்

பரிபூரணத்தன்மை இல்லாமல் ஒருவர் கிறிஸ்தவராக இருக்க முடியுமா? ஆம், ஏனெனில் எந்த ஒரு கிறிஸ்தவரும் பரிபூரணப்பட்டவரல்ல. மக்கள், "நான் முயற்சிசெய்தேன், ஆனால் தோற்றுவிட்டேன், எனவே நான் வெளியேறுகிறேன்" என்று கூறுகின்றனர். கருத்துக்களைத் தவறாகப் புரிந்துகொள்வதில் இருந்துதான் உச்ச அளவுகள் வருகின்றன. "ஒரு முறை இரட்சிக்கப்பட்டவர் எப்போதும் இரட்சிக்கப்பட்டவராக இருக்கிறார்" என்பது தவறானதாக உள்ளது! ஒரு முறை இரட்சிக்கப்பட்டவர் ஒருபோதும் இரட்சிக்கப்படவில்லை என்பதும்கூட தவறானதாக உள்ளது. கிறிஸ்தவர்கள், தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதை அறிய வேண்டும் (1 யோவான் 5:11-13). நாம் பரிபூரணப்பட்டவர்களாக இருக்க முடியாது; ஆகையால் நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட வேண்டும். நாம் பரிபூரணப்பட்டவர்களாக இருக்க முடியாது, ஆனால் ஒருவேளையில் நாம் ஒருநாளைக்கு விசுவாசம் உள்ளவர்களாக இருக்க முடியும் (ரோமர் 3:10, 23). விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறது (எபிரெயர் 11ஐக் காணவும்). நாம் நம்மைக்கொண்டே நம்மை இரட்சித்துக்கொள்ள முடி- யாது, எனவே நாம் நம்மை இரட்சிப்பதற்கு இயேசுவில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது விசுவாசம் நம்மை இரட்சிப்பதில்லை; நமது விசுவாசத்தின் கருப்பொருளே (இயேசுவே) நம்மை இரட்சிக்கிறார்.

## தினமும் ஒளியில் நடத்தல்

பரிசுத்தவான்களாகிய நாம் ஒளியில் நடக்கும்போதுகூடப் பாவம் செய்கிறோம். 1 யோவான் 1:7-2:3ஐ வாசியுங்கள். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை இரட்சித்துள்ளது; அவரது "உடன்படிக்கையின் இரத்தம்"கூட

*நம்மைப் பரிசுத்தமாக்கி உள்ளது (எபிரெயர் 10:29அ வைக் காணவும்). பரிசுத்தவான்கள் தொடர்ந்து பாவத்தில் இருந்து கழுவப்படுகின்றனர் மற்றும் பரிசுத்தமாக்குதலில் தொடர்ந்து வளருகின்றனர்.*

*மோசேக்கு ஒரு பிரமாண முறைமை கொடுக்கப்பட்டது; பரிசுத்த வான்கள் இப்போது விசுவாச முறைமையில் வாழ்கின்றனர். விசுவாசம் என்பது பூமியின்மீது மிகவும் நடைமுறைக்குரிய விஷயமாயிருக்கிறது. நாம் விசுவாசித்து நடக்கிறோம் (பரிபூரணமாகுதல் அல்ல; 2 கொரிந்தியர் 5:7). "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4; ரோமர் 1:17அ; கலாத்தியர் 3:11ஆ; எபிரெயர் 10:38அ வைக் காணவும்). தேவன் தாமே மேற்கோள் காண்பிக்கையில் நாம் நின்று வேதவசனங்களை விசேஷித்த வகையில் கவனிக்கக் கடவோம்!*

*"கொரிந்து நகரில் கலகம் உண்டாகியிருந்த தேவனுடைய சபை" பரிசுத்தமாக்கப்பட்டிருந்தது (1 கொரிந்தியர் 1:2). கொடுமையான பாவிகள் என்ற வகையில் அவர்கள் மனந்திரும்பியிருந்தனர், அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட்டிருந்தன (1 கொரிந்தியர் 6:9-11). அவர்கள் உடனடியாக "பரிசுத்தவான்கள்" ஆகியிருந்தனர், பின்பு தினமும் அவர்கள் பரிசுத்தத்தில் வளர்ந்து கொண்டிருந்தனர்.*

*தேவனும் (யோவான் 10:36; 1 தெசலோனிக்கேயர் 5:23) கிறிஸ்துவும் (1 கொரிந்தியர் 1:30; எபிரெயர் 2:11) பரிசுத்தமாக்குகின்றனர். எல்லா ருக்கும் ஒரேமுறையாக ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் தெய்வீக பலியே பரிசுத்தமாக்குதலின் அஸ்திபாரமாக உள்ளது (எபிரெயர் 10:10, 14, 16-24, 29; எபிரெயர் 7-9ஐக் காணவும்). சத்தியமும் (யோவான் 17:17, 19), "தேவனுடைய வசனமும் ஜெபமும்" (1 தீமோத்தேயு 4:5), பரிசுத்த ஆவியானவரும் (ரோமர் 15:16; 1 பேதுரு 1:2) பரிசுத்தமாக்குகின்றன[ர்.] இவையாவற்றுடனும் கூடுதலாக, விசுவாசம் பரிசுத்தமாக்குகிறது (நடபடிகள் 26:18).*

*முடிவு என்னவாக உள்ளது? கொரிந்தியர்கள் இருந்தவாறே இருக்கும்படி விட்டுவிடுவதற்காக அவர்களை இயேசு இரட்சிக்கவில்லை. பரிசுத்தவான்கள் மனந்திரும்புதலில் வாழவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் "பரிபூரணப்பட்ட தூதர்களாக" இராவிட்டாலும், அவர்கள் "பரிசுத்தவான்களாக" உள்ளனர். ஒரு கிறிஸ்தவர் பரிசுத்தமாகுதலில் வளரு கிறார்.*

## சீஷத்துவம்

*பரிசுத்தமாகுதல் என்பது சீஷத்துவமாக, கிறிஸ்துவைப் போல் இன்னும் அதிகமாக ஆவதற்குக் கற்றுக்கொள்ளும் செயல்முறையாக மற்றும் வளருதலாக உள்ளது. நாம் கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:5-11), தமது சரீரங்களைத் தினந்தோறும் அடக்க வேண்டும் (1 கொரிந்தியர் 9:23-27), மற்றும் பழைய மனுஷனைக் களைந்துபோட்டுப் புதிய மனுஷனை உடுத்திக்கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 5:17; எபேசியர் 4:22-24). நாம் இயேசுவின் கிருபையிலும்*

அறிவிலும் வளருகிறோம் (2 பேதுரு 3:18). நமது வளர்ச்சியின் மூலமாக, இயேசு நமக்குள் உருவாகிறார் (கலாத்தியர் 4:19). ஒவ்வொரு சிந்தனையும் அவருக்குச் சிறைப்பிடிக்கப்பட்டதாகிறது (2 கொரிந்தியர் 10:5).

ஆவிக்குரியவகையில் துறவிகள் யாரும் இல்லை. தேவன் தமது சபையைப் பரிசுத்தவான்களைக் கொண்டு ஏற்படுத்துகிறார். எவரொருவரும் தனிப்பட்ட முறையில் "ஆவிக்குரிய ஜாம்பவனாக" முடியாது. நாம் "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ... ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து"க் கொள்கிறோம் (எபிரெயர் 10:24). நாம் எல்லாரும் சரீரத்தின் உறுப்புகளுமாக இருக்கிறோம். "தனியாகத் திரியும்" கிறிஸ்தவர் என்று எவரும் இருப்பதில்லை. நாம் பின்வாங்கிப்போவதில்லை - நாம் அவரது சரீரத்தின் உறுப்புக்களாக ஊழியம் செய்கிறோம். நாம் நம்மையே வெறுத்து அன்றாடம் நமது சிலுவைகளை எடுத்துக்கொள்கிறோம் (லூக்கா 9:23-26).

இருபதாம் நூற்றாண்டு இறையியல் வல்லுநரான ரெய்ன்ஹோல்ட் நீய்பர் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> நமது வாழ்நாள் காலத்தில் தகுதியான எந்த ஒன்றும் சாதிக்கப்பட இயலாது; ஆகையால் நாம் நம்பிக்கையினால் இரட்சிக்கப்பட்டாக வேண்டும். வரலாற்றின் உடனடி சந்தர்ப்பப்பொருளெதிலும் ஏதொன்றும் ... முழுமையான கருத்தறிவை ஏற்படுத்துவதில்லை; ஆகையால் நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டாக வேண்டும். இருப்பினும் நாம் செய்கிற நீதிநெறிகள் எதுவும் தனிமையில் சாதிக்கப்பட முடியாது; ஆகையால் நாம் அன்பினால் இரட்சிக்கப்பட்டாக வேண்டும்.[1]

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]Reinhold Niebuhr, *The Irony of American History* (New York: Charles Scribner's Sons, 1952), 63.